22nd December 1956]

The Hon. Sri C. SUBRAMANIAM: அவர்கள் ஒப்புக்கொள்ளமாட்டேன் என்கிறார்கள் என்று சொல்லிவிட்டுப்போகிறார்.

Sri V. R. NAGARAJAN: பண்டைக்காலம் முதற்கொண்டே தமிழ் நாட்டு வட எல்லை திருப்பதி, திருத்தணி வரை இருந்திருக்கிறது. அங்கே தமிழ் ஜனங்களின் சதவிகிதம் அதிகம். ஆகையினால், அதைப்பற்றி ஏதாவது விசாரிப்பதற்கு இடம் உண்டா ?

The Hon. Sri C. SUBRAMANIAM: எவ்வளவு தூரம் வட எல்லை தள்ளிப்போகும் என்று புள்ளி விவரங்களைக்கொண்டு முடிவு சொல்ல வேண்டியது ஸ்ரீ படாஸ்கர்தான். ஆகையினாலே நாம் ஒன்றும் இப்பொழுது முடிவு சொல்ல முடியாது. நமது வட எல்லை தெற்கே முன்னேறுமா, வடக்கே முன்னேறுமா, திருப்பதியும் சேருமா என்பதெல்லாம் புள்ளி விவரங்களை கணக்கில் வைத்துக்கொண்டு முடிவு செய்ய வேண்டிய விஷயம்.

DEPUTY SPEAKER: Short Notice Question No. 11. Sri M. Kalyanasundaram will put his question.

(Sri K. Vinayakam rose to put supplementary questions arising out of the main short notice question No. 10.)

DEPUTY SPEAKER: I have allowed sufficient number of supplementary questions.

Sri K. VINAYAKAM: I am raising a different issue, Sir. In view of the importance of this question that is pending solution for a long time, I request you to allow a half-hour debate at the end of to-day's sitting.

The Hon. Sri C. SUBRAMANIAM: If a half-hour debate will solve the problem, certainly I will be the first person to agree to it. On the other hand, it is likely to create complications.

Sri K. VINAYAKAM: I want your ruling in the matter, Sir.

DEPUTY SPEAKER: We have discussed this question during the budget discussion. Again I have allowed to-day twenty minutes for this simple question. Not only now, but also for the last two years this question has been discussed on the floor of this House on several occasions. Therefore, there is no need for a half-hour debate. This is my ruling.

Sri M. Kalyanasundaram will now put his short notice question No. 11.

Plantation workers

* 11(S.N.) *Q.*—Sri M. KALYANASUNDARAM: Will the Hon. the Minister for Agriculture be pleased to state the action taken by the Government to implement the award of the Special Tribunal in respect of plantation workers?

The Hon. Sri M. BHAKTAVATSALAM: The implementation of the award of the Special Industrial Tribunal for Plantations has been stayed by the Supreme Court of India. No action could, therefore, be taken by the Government to implement the award.

Sri V. BALAKRISHNAN : பெரிய நியாய கோர்டிலே ரூபாய்க்கு ஒரு அணு வீதம் கூட்டிக்கொடுக்கவேண்டுமென்று இடைக்கால உத்தரவு போட்டிருக்கிறார்கள். அந்த உத்தரவு அமுலுக்கு கொண்டுவரப்படுமா ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : ஆம். சுப்ரீம் கோர்டு அவ்வாறு உத்தரவு போட்டிருக்கிறார்கள். அது நிச்சயமாக அமுலுக்குக் கொண்டுவரப்படும். அதற்கு மந்திரியின் உதவி வேண்டியதில்லை.

Sri P. RAMAMURTHI : சென்னை ராஜ்யத்தில் ஏற்பட்ட ஒரு தொழில் கோர்ட்டு செய்த தீர்ப்புக்கு எதிராக முதலாளிகள் அப்பீல் செய்திருக்கிறார்கள். அப்பீலில் ஸ்டே ஆர்டர் கொடுக்கப்பட்டிருக்கிறது. சென்னை சர்க்கார் அந்த அப்பீலில் தங்கள் சார்பாக ஒரு வக்கீலை ஆஜராகச் செய்து அதற்கு எதிராக வழக்காட உத்தேசம் உண்டா ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : அவ்வாறு உத்தேசம் ஒன்றுமில்லை.

9-20 a.m. **Sri P. RAMAMURTHI :** வழக்கு கீழ் கோர்ட்டில் கிட்டதட்ட 4, 5 நாட்கள் நடந்தபிறகு அப்பீலுக்குப்போயிருக்கிறது. சாதாரண தொழிலாளிக்கு தினசரி 10 அணுவாவது சம்பளம் கொடுக்கவேண்டுமென்று சுப்ரீம் கோர்டில் வழக்காடி அவர்களுக்கு வசதிக் குறைவு என்பதைத் தெரிந்து கொண்டு அவர்களுக்கு நியாயம் வழங்குவதற்கு சர்க்கார் ஏதாவது உதவி செய்வதற்கு முன்வருவார்களா ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : அவ்வாறு யோசனை ஒன்றும் சர்க்காரிடம் இல்லை. அதற்கு அவசியம் இருக்கிறதாக சர்க்கார் கருதவில்லை.

Sri N. K. PALANISAMY : தீர்ப்பு வெளியானபிறகு சர்க்கார் ஒரு முக்கூட்டு மகாநாடு நடத்த ஏதாவது யோசனை செய்திருந்ததா ? அப்படியானல் அது என்னவாயிற்று ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : " அவார்ட் " பிரசுரிக்கப்பட்ட பிறகு சர்க்கார் முக்கூட்டு மகாநாடு நடத்துவதற்காக ஒன்றும் முற்படவில்லை.

Recognition of Trade Unions

* 12 (S.N.) Q.—Sri M. KALYANASUNDARAM : Will the Hon. the Minister for Agriculture be pleased to state where the matter now stands in respect of the proposed legislation for recognition of Trade Unions?

The Hon. Sri M. BHAKTAVATSALAM: A tentative draft Bill on the subject was prepared and circulated to the members of the State Labour Advisory Board for their views. The draft of the Bill is being finalized in the light of the suggestions made by the members of the Board at the meeting held on 10th October 1956.

Sri M. KALYANASUNDARAM : ஸார், இந்த மசோதா எப்பொழுது சட்டசபைக்கு கொண்டுவரப்படும் ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : இந்த மசோதா தயாராக்கப்பட்டுவிட்டது என்றே சொல்லலாம். இதற்கு மேல் நடவடிக்கைகள் தான் எடுத்துக்கொள்ளவேண்டும். இதற்கும் மத்திய அரசாங்கத்தின் அங்கீகாரம் வேண்டியிருக்கும். இதெல்லாம் பெற்றபிறகுதான் சட்டசபைக்கு கொண்டுவரப்படும்.